அரசு பள்ளியில் தமிழ் கூடல் விழா

▶ பூலாங்கிணறு அரசு மேல்நிலைப் பள்ளியில் தமிழ் கூடல் விழா நடந்தது.

உடுமலை, நவ.25: உடுமலையை அடுத்துள்ள பூலாங்கிணறு அரசு மேல்நிலைப் பள்ளியில் தமிழ் இலக்கிய மன்றத்தின் சார்பில் தமிழ் கூடல் விழா நடைபெற்றது.

பள்ளி உதவி தலைமை ஆசிரியர் ஜெகநாத ஆழ்வார் சாமி தலைமை தாங்கினார். கணித ஆசிரியர் ரமேஷ் முன்னிலை. வகித்தார். முதுகலை தமிழ் ஆசிரியர் சரவணன் வரவேற்றார். ராமச்சந்திராபுரம் அரசு மேல்நிலைப்பள்ளி முதுகலை தமிழாசிரியர் மருதமுத்து சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு தமிழும் தன்னம்பிக்கையும் என்னும் தலைப்பில் தமிழ் இலக்கியங்கள் குறித்தும் சுய முயற்சியால் முன்னேறி அவர்கள் குறித்தும் சிறப்புரையாற்றினார். அதைத்தொடர்ந்து போட்டியில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு இயற்பியல் ஆசிரியர் கணேச பாண்டியன் பரிசுகள் வழங்கினார். நாட்டு நலப்பணி திட்ட அலுவலர் ஜான் பாஷா நன்றி கூறினார்.

108 சங்காபிஷேகம்-யாக பூஜை

▶ திருப்பூர் மாவட்டம் மேற்குப்பதி ஊராட்சி அபிஷேகபுரத்தில் அயிராவதேஸ்வரர் கோயிலில் நேற்று கார்த்திகை மாதத்தில் சோமவாரத்தில் 108 சங்காபிஷேகம் யாக பூஜைகளை கோவில் சிவாச்சாரியார்கள் நடத்தினர். 108 வலம்புரி சங்குகளில் புனித நீர் நிரப்பப்பட்டு சிறப்பு வழிபாடு அபிஷேகம் நடைபெற்றது.

கொசுப்புழு ஒழிப்பு பணிக்கு 800 ஊழியர்கள் நியமனம்

சிறப்பு முகாம்கள் மூலம் கண்காணிப்பு

திருப்பூர், நவ. 25: திருப்பூரில் வடகிழக்கு பருவமழை பெய்து வருகிறது. இதனால் காலநிலை திடீர் மாற்றத்தால் பெரியவர்கள் முதல் குழந்தைகள் வரை பலரும் காய்ச்சல், சளி, இருமல் உள்ளிட்ட பாதிப்புகளால் அவதிப்பட்டு வருகின்றனர். அந்த பாதிப்பு 5 நாட்களுக்கும் மேலாக நீடித்து வருகிறது. இதனால் அரசு மருத்துவமனைகள், அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள், தனியார் ஆஸ்பத்திரிகளிலும் நோயாளிகள் கூட்டம் அதிகரித்து உள்ளது. திருப்பூரில் பருவமழை காரணமாக பல்வேறு இடங்களில் தண்ணீர் தேங்கி உள்ளது. இதனால் டெங்கு கொசு உருவாகும் அபாயம் உள்ளது. திருப்பூர் அரசு மருத்துவமனையில் டெங்கு பாதிப்பு அறிகுறியுடன் 4 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர். மாவட்ட அளவில் தினமும் 2 அல்லது 3 பேருக்கு டெங்கு காய்ச்சல் பாதிப்பு ஏற்பட்டு வருகிறது. எனவே டெங்கு காய்ச்சல் பரவலை தடுக்க சுகாதாரத்துறை தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது.

இது குறித்து மாவட்ட சுகாதாரத்துறை அதிகாரிகள் கூறியதாவது: திருப்பூர் மாவட்டத்தில் பருவமழை மற்றும் கால நிலை மாற்றம் காரணமாக ஆங்காங்கே டெங்கு மற்றும் காய்ச்சல் பாதிப்பு ஏற்பட்டு வருகிறது. அனைத்து பகுதிகளிலும் சிறப்பு மருத்துவ முகாம் நடத்தி வருகிறோம். பாதிப்பு அதிகம் உள்ள இடங்களில் சிறப்பு மருத்துவ முகாம்களை நடத்துகிறோம். மேலும் நடமாடும் மருத்துவ குழுவும் தயாராக உள்ளது.

வீடுகளில் மழைநீர் தேங்கும் வகையிலான பழைய டயர், தேங்காய் தொட்டி உள்ளிட்ட பொருட்களை அப்புறப்படுத்த வேண்டும். மேல் நிலை நீர்த்தொட்டிகளை மூடி வைக்க வேண்டும். காய்ச்சல் பாதிப்பு இருந்தால் அருகில் உள்ள அரசு மருத்துவமனை அல்லது ஆரம்ப சுகாதார நிலையங்களில் சிகிச்சைக்கு அனுமதிக்க வேண்டும். தன்னிச்சையாக கடைகளில் மாத்திரைகளை வாங்கி பயன்படுத்தக்கூடாது.

டெங்கு காய்ச்சல் பாதிப்புகளை கட்டுப்படுத்த திருப்பூர் மாநகராட்சி பகுதியில் 300 பேர், நகராட்சி, ஊராட்சிகளில் தலா 30 பேர், ஒரு பிளாக்கிற்கு தலா 20 பேர் வீதம் மொத்தம் 800 ஊழியர்கள் நியமிக்கப்பட்டு உள்ளனர்.

இவ்வாறு அதிகாரிகள் கூறினர்

மாநில அளவிலான கலைத்திருவிழா போட்டி

திருப்பூர் மாணவ-மாணவிகள் பங்கேற்பு

கரூரில் இன்று தொடங்குகிறது

திருப்பூர், நவ.25: பள்ளிக்கல்வித்துறை சார்பில் ஆண்டுதோறும் பள்ளி மாணவர்களிடையே கலை திறனை மேம்படுத்தும் வகையில் கலை திருவிழா போட்டிகள் நடத்தப்பட்டு வருகிறது.

திருப்பூர் மாவட்டத்தில் ஏற்கனவே பள்ளி மற்றும் வட்டார அளவிலான கலைத் திருவிழா போட்டிகள் நடத்தப்பட்டுள்ளது. இதில் திருப்பூர் மாவட்டத்தில் பள்ளி அளவில் 1,60,740 மாணவர்கள் கலைத் திருவிழா போட்டிகளில் பங்கெடுத்த நிலையில் வட்டார அளவிலான போட்டிகளும் நிறைவு பெற்று 3,275 மாணவர்கள் மாவட்ட அளவிலான போட்டிக்கு தேர்வு செய்யப்பட்டனர்.

இவர்களுக்கான மாவட்ட அளவிலான கலை திருவிழா போட்டிகள் கடந்த 5ஆம் தேதி முதல் 7ஆம் தேதி வரை ஜெய்வாபாய் மற்றும் நஞ்சப்பா மாநகராட்சி பள்ளிகளில் நடைபெற்றது. ஓவியம் வரைதல், கேலிச்சித்திரம் வரைதல், பாட்டு, ரங்கோலி, பானை ஓவியம், வில்லுப்பாட்டு, பரதநாட்டியம், மணல் சிற்பம், நாட்டுப்புறப்பாடல், தெருக்கூத்து உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகளில் தங்கள் திறமைகளை வெளிப்படுத்தினர்.

இதில் பல்வேறு பிரிவுகளில் நடைபெற்ற போட்டிகளில் தங்கள் திறமைகளை வெளிப்படுத்தி மாநில போட்டிக்கு மாணவர்கள் 114 பேர், மாணவிகள் 332 பேர் என 446 பேர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

இதில் துவக்கப்பள்ளி பிரிவில் 68 பேர், 6 முதல் 8ஆம் வகுப்பு பிரிவில் 63 பேர், 9 மற்றும் 10ஆம் வகுப்பு பிரிவில் 159 பேர், மேல்நிலைப்பள்ளி பிரிவில் 156 பேர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்கான மாநில அளவிலான கலைத் திருவிழா போட்டிகள் இன்று துவங்குகிறது.

அதன்படி 1முதல் 5ஆம் வகுப்பு வரை அரசு பள்ளி மற்றும் அரசு உதவி பெறும் பள்ளி மாணவ- மாணவிகளுக்கு கரூரில் இன்றும், 6 முதல் 8-ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு ஓசூரில் நாளையும், 9 மற்றும் 10ஆம் வகுப்பு அரசு பள்ளி மாணவர்களுக்கு சேலத்திலும், 11 மற்றும் 12ம் வகுப்பு அரசு பள்ளிகளுக்கும். அரசு உதவி பெறும் பள்ளி பள்ளி மாணவ மாணவியர்களுக்கு புதுக்கோட்டையில் 27 மற்றும் 28 ஆம் தேதிகளில் நடைபெற உள்ளது. கரூரில் நடைபெறும் போட்டிக்கு மாணவ மாணவிகள் பொறுப்பு ஆசிரியர்களுடன் புறப்படுகின்றனர். மாநில அளவில் வெற்றி பெறும் ஒரு மாணவ-மாணவிகளுக்கு தமிழ்நாடு அரசின் சார்பில் கலையரசன் மற்றும் கலையரசி விருதுகள் வழங்கப்பட உள்ளது.

காங்கயத்தில்

வெண்கல காளை சிலை அமைக்கு பணி

▶ காங்கயத்தில் காளை சிலை அமைக்கு பணி தொடக்க விழா நடைபெற்றது.

அமைச்சர் தொடங்கி வைத்தார்

காங்கயம், நவ.25: காங்கயத்தில் காளை சிலை அமைக்கும் பணி தொடக்க விழா நேற்று ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில் நடைபெற்றது. தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் தலைமையில், திருப்பூர் கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் இல. பத்மநாபன் மற்றும் ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் பிரகாஷ் முன்னிலையில் சிலை அமைக்கும் பணிக்கு பூமி பூஜை செய்து அடிக்கல் நாட்டப்பட்டது.

இதில் தமிழக முதலவர் மு.க. ஸ்டாலின் ஆணைக்கிணங்க, துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வழிகாட்டுதலின் படி காங்கயத்தில் காங்கயம் காளை சிலை அமைக்கும் பணி ரூ. 60 லட்சம் மதிப்பீட்டில் பூமி பூஜை செய்து தொடங்கப்பட்டுள்ளது. காங்கயம் காளை மிகவும் பிரபலமானது. அதற்கு மேலும் பெருமை சேர்க்க காங்கயத்தில் நிறுவப்படுகிறது என அமைச்சர் பேசினார். 11 அடி உயரம், 12 அடி நீளம், 3.25 அடி அகலமும் கொண்ட வெண்கல சிலை அமைக்கப்படுகிறது.

விழாவில் காளை சிலை அமைப்பு சங்க தலைவர் கார்த்திகேயன், நகரச்செயலாளர்கள் சேமலையப்பன், முருகானந்தன், ஒன்றிய செயலாளர்கள் சந்திரசேகர், சிவானந்தன், கருணை பிரகாஷ், பிரபு, செல்வம், நகர்மன்ற தலைவர் சூர்ய பிரகாஷ், அமைப்பு சாரா ஓட்டுநர் அணி மாவட்ட அமைப்பாளர் சண்முகசுந்தரம், கட்சி மற்றும் சிலை அமைப்பு சங்க நிர்வாகிகள், உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர்.

அரசு மருத்துவமனையில் தேங்கிய மழை நீர்

திருப்பூர், நவ.25: திருப்பூர் தாராபுரம் சாலை பெரிச்சி பாளையம் பகுதியில் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை செயல்பட்டு வருகிறது. இங்கு தினந்தோறும் புற நோயாளிகளாக ஆயிரக்கணக்கானோரும், உள் நோயாளிகளாக நூற்றுக்கணக்கானோர் சிகிச்சை பெறுகிறார்கள்.

இந்நிலையில் திருப்பூர் மாநகரில் கடந்த சில தினங்களாக சாரல் முதல் கனமழை வரை பெய்து வரக்கூடிய நிலையில் இங்கு 100 படுக்கைகள் கொண்ட சிறப்பு பகுதி அருகாமையில் மழைநீர் தேங்கி நிற்கிறது. இதனால் கொசு உற்பத்தியாகி சுகாதார சீர்கேடு ஏற்படும் அவலம் உள்ளதாகநோயாளிகள் தெரிவிக்கின்றனர். மழை காலங்களில் தண்ணீர் தேங்கி நிற்கும் பகுதிகளை கண்டறிந்து நிரந்தர நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் வலியுறுத்துகின்றனர்.

▶ திருப்பூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் 100 படுக்கைகள் கொண்ட சிறப்பு பிரிவு அருகே மழைநீர் தேங்கி உள்ளது.

ஆபத்தான நிலையில் இயங்கி வரும்

பொங்கலூர் தபால் நிலைய அலுவலகம்

பல்லடம், நவ.25: பல்லடம் அருகேயுள்ள பொங்கலூரில் பி.ஏ.பி. அலுவலக வளாகத்தில் உள்ள தபால் அலுவலக கட்டடங்கள் சேதமாகி ஆபத்தான நிலையில் உள்ளது. அதனை இடமாற்றம் செய்ய வேண்டும் என்று அப்பகுதி பொதுமக்கள் எதிர்பார்க்கின்றனர்.

பொங்கலூரில் ஆரம்பத்தில் கடை வீதியின் அருகில் செயல்பட்டது. தற்போது இந்த அலுவலகம் பி.ஏ.பி. அலுவலக வளாகத்தில் பழமையான கட்டடத்தில் கடந்த 15 ஆண்டுகளுக்கு மேலாக செயல்பட்டு வருகிறது. இங்கு தொடங்கிய காலத்தில் அந்த கட்டடம் நல்ல நிலையில் இருந்தது. சுற்றிலும் 100-க்கும் மேற்பட்ட குடியிருப்புகளும் இருந்தன. இதனால் அப்பகுதி பொதுமக்கள் பல்வேறு சேமிப்பு திட்டங்களில் இணைந்து சேமிக்கதபால் அலுவலகத்தை பயன்படுத்தி வந்தனர். ஆனால் தற்போது கட்டடங்களில் போதிய பராமரிப்பு இன்றி பி.ஏ.பி. குடியிருப்பு பகுதியில் பொதுமக்களின் எண்ணிக்கையும் வெகுவாக குறைந்துள்ளது. மிகவும் மோசமான, கனமழை பெய்தால் எப்போது வேண்டுமானாலும் கட்டடம் இடிந்து விழும் நிலையில் உள்ளது. இக்கட்டடத்தில் தான் தற்போது பொங்கலூர் தபால் நிலையம் செயல்பட்டு வருகிறது. மக்களின் குடியிருப்புகளுக்கு சற்று தொலைவில் அமைந்துள்ளதால் வயதானவர்கள் அங்கு சென்று வருவது மிகுந்த சிரமமாக உள்ளது. மேலும் பள்ளி மாணவர்கள் உள்பட பலரும் அங்கே சென்று வருவதில் சிரமம் ஏற்பட்டு வருகிறது. எனவே இந்த தபால் நிலையத்தை மக்கள் நடமாட்டம் மிகுந்த பகுதியில் இடமாற்றம் செய்தால் பொதுமக்களுக்கு பயனுள்ளதாக அமையும் என்று பொங்கலூர் பகுதி பொதுமக்கள் அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

▶ பல்லடம் அருகேயுள்ள பொங்கலூர் தபால் நிலைய அலுவலகம்.

வேன் கவிழ்ந்து ஐயப்ப பக்தர் பலி

அவிநாசி, நவ.25: அவிநாசி அருகே ஐயப்ப பக்தர்கள் வேன் கவிழ்ந்த விபத்தில் முதியவர் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்தார். சேலம் அருகே மேச்சேரி அடுத்துள்ள ஆட்டுக்காரனூர் பகுதியில் இருந்து சபரிமலை நேற்று முன் தினம் நோக்கி ஆம்னி வேன் வந்தது. இதில், சிறுவர்கள், முதியவர்கள், வேன் டிரைவர்கள் இருவர் உள்பட 24 பேர் பயணம் செய்தனர். திருப்பூர் மாவட்டம் அவிநாசி பழங்கரை புறவழிச்சாலை அருகே வந்தபோது பின்புற டயர் வெடித்ததில், கட்டுப்பாட்டை இழந்த வேன் சாலையில் வலது பக்கமாக கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இதில் 24 பேர் பாயாம் அடைந்தனர். அனைவரும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். இதில் சித்தையா (54) என்பவர் திருப்பூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்தார்.

கேத்தனூரில் இலவச மருத்துவ பரிசோதனை விழிப்புணர்வு முகாம்

▶ பல்லடம் அருகே கேத்தனூரில் இலவச மருத்துவ பரிசோதனை விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது.

பல்லடம், நவ.25: பல்லடம் அருகே கேத்தனூரில் இலவச மருத்துவ பரிசோதனை விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது. நேஷனல் மெடிகோஸ் ஆர்கனைசேஷன் கோவை சார்பில் பல்லடம் அருகே கேத்தனூரில் இலவச மருத்துவ பரிசோதனை விழிப்புணர்வு முகாம் தாத்தன் கோவில் மண்டபத்தில் நடைபெற்றது. இம்முகாமிற்கு கேத்தனூர் ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர்கள் ஹரிகோபால், சித்ரா ஆகியோர் முன்னிலை வகித்தனர். கோவை கங்கா மருத்துவமனை மார்பக புற்று நோய் அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர் ராஜா சண்முககிருஷ்ணன், திருப்பூர் மெடிக்கல் சென்டர் அறக்கட்டளை டாக்டர் ஈஸ்வரமூர்த்தி, மருத்துவ நிபுணர்கள் டாக்டர்கள் தர்மேந்திரா, நந்தகோபால், பாலகிருஷ்ணன், ராஜாராம், கிருஷ்ணன், தேவி, யோகாலட்சுமி, வித்யா உள்ளிட்ட மருத்துவ குழுவினர் 1456 நபர்களுக்கு இலவச மருத்துவ பரிசோதனை செய்து ஆலோசனைகளை வழங்கினர். கோவை அரவிந்த் கண் மருத்துவமனை சார்பில் பொதுமக்களுக்கு இலவச கண் பரிசோதனை நடத்தப்பட்டது.

திருப்பூர் அரசு பள்ளியில்

சுற்றுச்சுவர் உயரப்படுத்தும் பணி

திருப்பூர், நவ.25: திருப்பூர் காதர் பேட்டை பகுதியில் நஞ்சப்பா மாநகராட்சி ஆண்கள் மேல்நிலைப் பள்ளி செயல்பட்டு வருகிறது. இப்பள்ளி சுற்றிலும் மாணவர்களின் பாதுகாப்பிற்காக சுற்றுச்சுவர் அமைக்கப்பட்டுள்ளது. ஆனால் பள்ளியை ஒட்டிய காதர் பேட்டை சாலைகள் மேம்படுத்தப்பட்டதன் காரணமாக சுற்றுச்சுவர் உயரம் குறைந்தது. இதனால் மாலை நேரங்களில் சிலர் பள்ளிகளுக்குள் எளிதாக செல்லும் வகையில் இருந்தது. இதனை தவிர்க்க தற்போது சுற்றுச்சுவரை உயரப்படுத்தும் பணி நடைபெற்றது நடைபெற்று வருகிறது. மாநகராட்சி நிர்வாகம் சார்பில் ஏற்கனவே உள்ள சுற்றுச்சுவருக்கு மேலாக சுமார் 4 முதல் 5 அடி வரை சுவர் எழுப்பும் பணி நடைபெறுகிறது. பள்ளி நேரத்தில் மாணவர்கள் பள்ளியை விட்டு வெளியே செல்வது மற்றும் சட்டவிரோதமாக அந்நியர்கள் உள்ளே நுழைவதை தடுக்கும் வகையில் சுவர் எழுப்பும் பணி நடைபெற்று வருகிறது.

▶ திருப்பூர் காதர் பேட்டை பகுதியில் உள்ள நஞ்சப்பா மாநகராட்சி ஆண்கள் மேல்நிலைப் பள்ளியை சுற்றி காம்பவுண்ட் சுவர் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

கோரிக்கை அறிவிப்பு

எடெல்வீஸ் அசெட் ரீகன்ஸ்ட்ரக்சன் கம்பெனி லிமிடெட்

CIN: U67100MH2007PLC174759

ரீடெய்ல் சென்டரல் & பதிவு அலுவலகம்: எடெல்வீஸ் ஹௌஸ், சிஎஸ்டி சாலை சற்றுத்தொலைவில், கலினா, மும்பை 400098

கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 3(1) உடன் பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 ("சட்டம்") இன் பிரிவு 13(2) கீழ் கோரிக்கை அறிவிப்பு

இந்த, கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஒதுக்கீட்டாளர், நிதி சொத்துகளை எடெல்வீஸ் அசெட் ரீகன்ஸ்ட்ரக்சன் கம்பெனி லிமிடெட்டுக்கு ஒதுக்கீடு செய்துள்ளார், தவிர அதன் சொந்த/ திறனில் இங்கே கீழே குறிப்பிட்டுள்ள பல்வேறு ட்ரஸ்ட்களின் ட்ரஸ்டியாக செயல்படுகிறது (இதில் இருந்து இஆஆர்சி எனக் குறிப்பிடப்படும்.) சர்ஃபாசி சட்டம் 2002, பிரிவு 5-இன் கீழ் ஒப்படுத்த ஒதுக்கீடுகளை நிறைவேற்றும் வகையில் இஆஆர்சி ஆனது கடன்தாரரால் பெறப்பட்ட நிதி உதவி தொடர்பான கீழ்க்காணும் கடனீட்டு உரிமைகள், உத்திரவாதங்கள், அடமானங்கள் ஆகியவற்றுடன் நிதிச் சொத்துகள் தொடர்பான அனைத்து உரிமங்கள், உரிமைப்பத்திரம் மற்றும் உரிமைகள் ஆனது சர்ஃபாசி சட்டத்தின் விதிகளின் கீழ் இஆஆர்சி-க்கு வந்தடைந்துள்ளன. மேலும் இஆஆர்சி ஆனது கடனீட்டு கடனீந்தோரான அதன் அனைத்து உரிமைகளை செயல்படுத்துகிறது. கீழே கையொப்பமிட்டவர் பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 கீழ் எடெல்வீஸ் அசெட் ரீகன்ஸ்ட்ரக்சன் கம்பெனி லிமிடெடின் ("இஆஆர்சி") அதிகாரப்பூர்வ அதிகாரி ஆவார். கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 3 உடன் சட்டத்தின் பிரிவு 13(12) கீழ் தமக்குள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி, அதிகாரப்பூர்வ அதிகாரி சட்டத்தின் பிரிவு 13(2) கீழ் ஒரு கோரிக்கை அறிவிப்பு வழங்கி இருக்கிறார். ஒதுக்கீட்டாளரின் பின்வரும் கடன்தாரர்(கள்) அவர்களுக்கு வழங்கப்பட்ட சம்பந்தப்பட்ட கோரிக்கை அறிவிப்பில் குறிப்பிட்ட இங்கே கீழேயும் கொடுக்கப்பட்டதான தொகைகளை திருப்பிச் செலுத்துமாறு கோரியிருக்கிறார்.

மேற்கூறியது தொடர்பாக, கடன்தாரர்கள் இந்த அறிவிப்பு வெளியானதிலிருந்து 60 நாட்களுக்குள், எடெல்வீஸ் அசெட் ரீகன்ஸ்ட்ரக்சன் கம்பெனி லிமிடெடுக்கு இங்கே கீழே குறிப்பிட்ட தொகைகளை, மேற்கூறிய கடன்தாரர்(கள்) மூலம் நிறைவேற்றப்பட்ட பிற ஆவணங்கள்/பத்திரங்கள் ஏதேனுமிருந்தால் அவற்றுடன் கடன் ஒப்படுத்தம் கீழ் செலுத்தப்பட வேண்டிய, கீழே குறிப்பிட்ட தேதி(கள்) முதல் பணப்பட்டுவாடா மற்றும்/அல்லது பணமாக்கும் தேதி வரை, மேற்கூறியக் கோரிக்கை அறிவிப்பில் விவரிக்கப்பட்டவாறான மேற்கொண்டு வட்டியுடன் சேர்த்துச் செலுத்துமாறு இதன்மூலம் மீண்டும் ஒருமுறை அறிவிப்பு வழங்கப்படுகிறது.

வ. எண்.	கடன்தாரர்(கள்)/ உப-கடன்தாரர்(கள்) பெயர் / கடன் கணக்கு எண்	கோரிக்கை அறிவிப்பு நாள் & தொகை	பொறுப்பாட்சி & உரிமைபெற்றோர் விவரங்கள்
2.	1. திரு. வீரமணி J (கடன்தாரர்) 2. திரு.ஜெயபாலன் A (உப கடன்தாரர்) கடன் கணக்கு எண் 071LAPC00023	10.11.2025 and ₹ 11,81,471.40	இஆஆர்சி ட்ரஸ்ட் எஸ்சி - 478 & ஹர்யோதயா ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்

அடமானச் சொத்தின் விவரம்: கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், சிங்காநல்லூர் சார் பதிவு மாவட்டம், ஆலூர் வட்டம், உப்பிலிபாளையம் கிராமம், நத்தம் S.F.No.154/1A பகுதி –இல் உள்ள காலி வீட்டு மனை பின்வரும் அளவீடுகளையும் எல்லைகளையும் கொண்டது: வடக்கு: கிழக்கு மேற்கு நடைபாதை, தெற்கு: கிழக்கு மேற்கு சாலை, கிழக்கு: சுதாகரனின் சொத்து, மேற்கு: வையாபுரி மற்றும் பாட்டப்பனின் சொத்து. இதனிடையே அளவீடு: கிழக்கு மேற்காக வடக்கு பக்கம்.15 அடி, கிழக்கு மேற்காக தெற்கு பக்கம்.16 அடி, வடக்கு தெற்காக மேற்கு பக்கம்.38 அடி, வடக்கு தெற்காக கிழக்கு பக்கம்.38 அடி. பரப்பளவு 01 சென்ட் 153 ச.அடி அல்லது 54.719 ச.மீட்டர் அல்லது 589 ச.அடி. இந்த வீட்டு மனையில் உள்ள வீட்டு சொத்து அதனுடன் கூட நடைபாதை உரிமைகள், பயன்பாட்டு உரிமைகள் மற்றும் இதர துணைப் பொருள்கள் இணைக்கப்பட்டுள்ளன. சொத்தின் வரி மதிப்பீட்டு எண்.6443916, மின்சார வாரிய இணைப்பு எண்.03-048-005-568. இந்த சொத்து கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லைக்குள் அமைந்துள்ளது.

மேற்கூறிய கடன்தாரர்கள் மேற்கூறியவாறு எடெல்வீஸ் அசெட் ரீகன்ஸ்ட்ரக்சன் கம்பெனிக்கு பணப்பட்டுவாடாச் செய்யத் தவறினால், எடெல்வீஸ் அசெட் ரீகன்ஸ்ட்ரக்சன் கம்பெனி, சட்டத்தின் பிரிவு 13(4) மற்றும் பொருந்தும் விதிகளின் கீழ், சேவுகள் மற்றும் விளைவுகள் வகையில் மேற்கூறிய கடன்தாரரின்(கள்) முழுப் பொறுப்பில், மேற்கூறிய கடனீட்டுச் சொத்துகளின்மீது நடவடிக்கை மேற்கொள்ளும். கடன்தாரர்கள் எடெல்வீஸ் அசெட் ரீகன்ஸ்ட்ரக்சன் கம்பெனியின் முன்கூட்டிய எழுத்துப்பூர்வ ஒப்புதலின்றி விற்பனை, குத்தகை அல்லது பிறவழியில், மேற்கூறியச் சொத்துகளை பெயர்மாற்றம் செய்வதற்கு சட்டத்தின் கீழ் தடை செய்யப்பட்டிருக்கிறார்கள். சட்டத்தின் விதிமுறைகள் அல்லது அதன்கீழ் உருவாக்கப்பட்ட விதிகளை மீறும் அல்லது மீறத் தூண்டும் நபர், சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டவாறு சிறைதண்டனை மற்றும்/அல்லது அபராதம் விதிக்கப்படுவதற்கு உட்படுவார்.

நாள்: 25.11.2025 ஒம்/- அதிகாரப்பூர்வ அதிகாரி

இடம்: தமிழ்நாடு எடெல்வீஸ் அசெட் ரீகன்ஸ்ட்ரக்சன் கம்பெனி லிமிடெடுக்காக

Edelweiss Asset Reconstruction

க்ரிஹும் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட்

பதிவு பெற்ற அலுவலகம்: 6 ஆவது தளம், பி பில்டிங், கங்கா ட்ரூனோ, லோஹேகான், புனே, மகாராஷ்டிரா-411014. கிளை அலுவலகம் அலகு: எண்.1510, 2 ஆவது தளம், ஸ்ரீ காம்ப்ளெக்ஸ், திருச்சி சாலை, கோயம்புத்தூர், தமிழ்நாடு-641018.

மின்-ஏலம்- விற்பனை அறிவிப்பு சர்ஃபாசி சட்டத்தின் கீழ் கடனீட்டு அசையா சொத்து விற்பனை

பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 (சட்டம்) மேலும் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 (விதிகள்) விதி 8&9 கீழ் அசையா சொத்துகளின் மின்-ஏலம் விற்பனை அறிவிப்பு.

இங்கே உள்ள அறிவிப்பின்மூலம் பொதுமக்களுக்கு பொதுவாகவும், கடன்தாரர்கள்/ உப-கடன்தாரர்கள்/ அடமானதாரர்கள் / ஜாமீன்தாரர்களுக்கு குறிப்பாகவும் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடனீட்டுச் சொத்துகளானது க்ரிஹும் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்டின் (இதற்குப் பிறகு சட்டத்தின்படி கடனீட்டு கடனீந்தோர் என்று குறிப்பிடப்படும்) அதிகாரப்பூர்வ அதிகாரியால், சட்டத்தின் பிரிவு 13 (12) இன் படியும், கடனீட்டு சொத்துகளின் (அமலாக்கம்) சட்டத்தின் பிரிவு 13(2) மற்றும் விதிகள் 8 &9 இன் கீழ் அளிக்கப்பட்ட அதிகாரத்தின்படி சுவாதீனம் செய்துள்ளார்.

கடனீட்டு சொத்துகள் அவை எங்கே உள்ளதோ, என்ன உள்ளதோ, எப்படி உள்ளதோ, அதே அடிப்படையில் 26.12.2025 நாளில் மின் ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும். இதன் மூலம் பொது மக்களுக்குத் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், மின்- ஏல இயங்குதளத்தில் அதன் இணையதள லிங்க்கில் அதாவது, https://www.bankeauctions.com மூலமாக மின்-ஏலம் நடைபெறும். விற்பனையின் விரிவான நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளை தெரிந்து கொள்ள க்ரிஹும் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்/கடனீட்டு கடனீந்தோரின் இணையதளம் அதாவது, www.grihumhousing.com- ஐ பார்வையிடவும்.

வ. எண்.	முன்மொழிவு எண். வாடிக்கையாளர் பெயர் (A)	கோரிக்கை அறிவிப்பு தேதி மற்றும் நிலுவைத்தொகை (B)	சுவாதீன தன்மை (C)	சொத்தின் விவரம் (D)	நிர்ணய விலை (E)	முன்வைப்புத் தொகை (நி.வி.-ல் 10%) (F)	முன்வைப்புத் தொகை செலுத்தும் தேதி (G)	ஏல உயர்வுத் தொகை (H)	சொத்தை பார்வையிடும் தேதி மற்றும் நேரம் (I)	ஏலத் தேதி மற்றும் நேரம் (J)	தெரிந்த வில்லங்கங்கள் / நிதிசார் வழக்குகள் தெரிந்தது ஏதேனும் (K)
1	கடன் எண். LAP06102000000050565 82 & HL00118100000005029 035 சதீஷ் கந்தசாமி (கடன்தாரர்), துர்கா K (உப கடன்தாரர்), ஜெகதீஷ் கந்தசாமி (உப கடன்தாரர்)	அறிவிப்பு தேதி: 08/08/2025 மொத்த நிலுவைத் தொகை: 08.08.2025 தேதியின்று ரூ.2,84,264/- (ரூபாய் இரண்டு லட்சத்து எண்பத்து நான்காயிரத்து இருநூற்று அறுபத்து நான்கு மட்டும்) மற்றும் நிலுவைத் தொகையைத் திருப்பிச் செலுத்தும் காலம் வரையிலான ஆண்டு வட்டி 18% உட்பட. 08.08.2025 தேதியின்று ரூ.24,66,519/- (ரூபாய் இருபத்து நான்கு லட்சத்து அறுபத்து ஆறாயிரத்து ஐந்நூற்று பத்தொன்பது மட்டும்) மற்றும் நிலுவைத் தொகையைத் திருப்பிச் செலுத்தும் காலம் வரையிலான ஆண்டு வட்டி 13.60% உட்பட.	நேரடி	கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், அவினாசி சார் பதிவு மாவட்டம், அவினாசி வட்டம், ஈட்டிவீரம்பாளையம் கிராமம், S.F.No.100, ஏக்கர் 9.14 உள்ள சொத்தில் புதிய S.F.No.100/2 இன் 4.50 ஏக்கர் நிலம் சாலைகள் மற்றும் இதர வசதிகளுடன் வீட்டு மனைகளாக ஆர்.பி.எஸ்.நகர் என்ற பெயருடைய மனைத்திட்டத்தில் மாற்றப்பட்டுள்ள அனைத்து துண்டு மற்றும் பகுதி உள்ள சொத்து. அதில் மனை எண்.10 பின்வரும் எல்லைகளும் அளவீடுகளும் கொண்டது. எல்லைகள்: வடக்கில்: ம